// பத்திரிக்கை விளம்பரம்//

தமிழ்நாடு அரசு

# வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

போளூர் வட்டம், திருவண்ணாமலை மாவட்டம்.

கூடுதல் அறிவிக்கை எண். அ3/3244/2025 நாள்: 03.10.2025

**அரசு கடிதம் (Ms) No.636, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை Ser.8(1)/2025 நாள் -18.09.2025 –இல் கிராம உதவியாளர் பணிநியமனத்திற்கான அதிகபட்ச வயது வரம்பு நிர்ணயம் செய்வது குறித்து வழங்கப்பட்ட தெளிவுரைகளின்படி** திருவண்ணாமலை மாவட்ட வருவாய் அலகு, போளூர் வட்டத்தில் காலியாக உள்ள 03 (மூன்று) கிராம உதவியாளர்கள் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்பிட தகுதியுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் **கூடுதலாக** வரவேற்கப்படுகின்றன. கீழே கொடுக்கப்பட்டுள்ள இட ஒதுக்கீடு, கல்வித்தகுதி மற்றும் வயது வரம்பிற்குட்பட்ட நபர்கள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும். **இப்பணிநியமனத்திற்கு 10.07.2025 அன்று வெளியிடப்பட்ட அறிவிக்கை எண்.** அ3/3244/2025 **இன்படி ஏற்கனவே விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ளதால் அவர்கள் மீண்டும் தற்போது விண்ணப்பிக்கத் தேவையில்லை.**

| | | |
|---|---|---|
| விண்ணப்பங்கள் பெறப்படும் நாள் | : | 06.10.2025 |
| விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் | : | 20.10.2025 |
| வாசித்தல் மற்றும் எழுதும் திறனறித் தேர்வு | : | தனியே கடிதம் மூலம் தெரிவிக்கப்படும் |
| நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள் | : | |

| | |
|---|---|
| பதவியின் பெயர் | கிராம உதவியாளர் |
| சம்பள விகிதம் | சிறப்பு காலமுறை ஊதியம் – Level 06 (ரூ.11,100/- – ரூ.35,100/-) |
| வட்டத்தின் பெயர் | போளூர் |
| காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை | பணிநியமனம் செய்யப்பட உள்ள கிராமங்களின் விவரம் |
| 03 | 01. வாழியூர்<br>02. சு.நம்மியந்தல்<br>03. திருவாட்டினந்தல் |

Scanned with OKEN Scanner

## 2. இனச்சுழற்சி விவரம்

| வ. எண். | இனச் சுழற்சி எண் | வகுப்பு | பொது/ பெண் | முன்னுரிமை/ முன்னுரிமையற்றவர் | விதவை / முன்னாள் இராணுவத்தினர்/ மாற்றுத்திறனாளி/முன்னுரிமை |
|---|---|---|---|---|---|
| 1 | 70 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (BC) (முஸ்லீம் தவிர) | பொது | முன்னுரிமையற்றவர் | - |
| 2 | 71 | பொதுப்பிரிவினர் (GT) | பெண் | முன்னுரிமையற்றவர் | மாற்றுத் திறனாளிகள் (காது கேளாதோர் & செவித்திறன் குறைபாடு உடையோர்) |
| 3 | 72 | ஆதிதிராவிடர் (SC) | பொது | முன்னுரிமை உடையவர் | பிராந்தியப் படையில் ஆறு மாதத்திற்கு மேல் பணிபுரிந்து, பின்னர் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டதை தொடர்ந்து பிராந்தியப் படையில் பகுதி நேர பணியாளராக பணிபுரிவோர் |

## 3. கல்வித் தகுதி

தமிழ்நாடு அரசுத் தேர்வுகள் இடைநிலைப் பள்ளி இறுதி வகுப்பு சான்றிதழ் தேர்வில் (SSLC – Secondary School Leaving Certificate Examination) தமிழ் ஒரு பாடமாகக் கொண்டு தேர்வு எழுதப்பட்டிருக்க வேண்டும். (குறிப்பு – SSLC (Secondary School Leaving Certificate Examination) மதிப்பெண் பட்டியல் கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும்.

## 4. வயது

| வயது வரம்பு | BC/MBC/DNC | SC/ST/Destitute Widow | OC/GT |
|---|---|---|---|
| அதிகபட்ச வயது | 39 | 42 | 32 |
| குறைந்தபட்ச வயது | 21 | 21 | 21 |
| வயது குறித்து தகுதி ஏற்படுத்தும் தேதி | 01.07.2025 தேதிப்படி வயது கணக்கிடப்படும். | | |
| மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகபட்ச வயது வரம்புடன் 10 ஆண்டுகள் கூடுதலாக கணக்கில் கொள்ளப்படும். (Tamil Nadu Government Servants (Conditions of Service) Act – 2016) | | | |
| முன்னாள் இராணுவத்தினருக்கு<br>50 வயது – இதர வகுப்பினர்<br>55 வயது - ST /SC(A)/SC/MBC/DNC/ BC /BC(M) | | | |

Scanned with OKEN Scanner

5. இதர தகுதிகள் / நிபந்தனைகள்-

- விண்ணப்பதாரர்கள் போளூர் வட்டத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும்.
- தமிழில் பிழையின்றி எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும்.
- கிராம உதவியாளர்கள் நியமனம் தொடர்பாக அரசால் வெளியிடப்பட்டுள்ள அரசாணை (நிலை) எண். 312, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (பணி-8(1)) துறை, நாள்: 04.06.2025-ல் தெரிவிக்கப்பட்டுள்ள திருத்தப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி உரிய கல்வித்தகுதி, மிதிவண்டி/இரு சக்கர மோட்டார் வாகனம் ஓட்டும் திறன், வாசித்தல் மற்றும் எழுதுதல் திறன், வசிப்பிடம் (Native Resident), நேர்காணல் ஆகியவற்றிற்கு தனித்தனியே மதிப்பெண்கள் வழங்கப்பட்டு ஒட்டுமொத்த மதிப்பெண்கள் அடிப்படையில் விண்ணப்பதாரர்களின் தரவரிசைப்பட்டியல் தயார் செய்யப்பட்டு காலிப்பணியிடங்களுக்கு பணிநியமனம் செய்யப்படும்.
- இருசக்கர மோட்டார் வாகன ஓட்டுநர் உரிமம் வைத்திருப்பின் வாகனம் ஓட்டும் திறன் கண்டறிய தனியாக தேர்வு நடத்தப்பட மாட்டாது. மாறாக இருசக்கர வாகன ஓட்டுநர் உரிமம் இல்லையெனில் வாகனம் ஓட்டும் திறன் கண்டறிய தனியே தேர்வு நடத்தப்படும்.
- பணி நியமனத்தின்போது உடல் தகுதிச் சான்று சமர்ப்பிக்க வேண்டும்.
- இருதார மனைவி உடையவர்களாக இருக்க கூடாது மற்றும் வேறு கணவர் /மனைவி உயிருடன் உள்ள ஒருவரை திருமணம் செய்திருக்க கூடாது.
- தகுதியில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- அழைப்பு கடிதம் (Calling Letter) பெறுவது மட்டுமே பணி நியமனத்திற்கான ஆணை எனக் கருதப்பட மாட்டாது.
- பரிசீலனையில் விண்ணப்பதாரர்கள் அளித்த தகவல்கள் தவறு என கண்டறியப்பட்டால் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.
- நேர்முக தேர்வின் போது சான்றுகள் சரிப்பார்ப்பின் போதும் அசல் சான்றுகள் / ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

6. விண்ணப்பிக்கும் முறை

- விண்ணப்பதாரர்கள் விண்ணப்ப படிவங்களை https://tiruvannamalai.nic.in/notice_category/recruitment/ என்ற

Scanned with OKEN Scanner

இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

- விண்ணப்பதாரர்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை உரிய ஆவணங்களுடன் போளூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ கடைசி நாளான 20.10.2025-க்குள் சமர்ப்பிக்க வேண்டும். அதன் பின்னர் வரப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
- வாசித்தல் மற்றும் எழுதும் திறனறித் தேர்விற்கும், நேர்முக தேர்விற்கும் உரிய நாள் குறிப்பிட்டு விண்ணப்பதாரர்களுக்கு தனியே கடிதம் அனுப்பப்படும்.

3/10/25

வட்டாட்சியர்,
போளூர்.

3/10/25

Scanned with OKEN Scanner